சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. P.V.சாண்டிலியன்.,எம்.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ம் நாள் செவ்வாய்கிழமை

இடைமனு எண்.2/2024.

இன்

அசல் வழக்கு எண்.319 /2017

....

விஜயா .. மனுதாரர்/வாதி

..எதிர்..

மாணிக்கம் ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 19.10.2024 ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.சி.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும் ,எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு . சி. ரமணிதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர் /வாதி (PW1) தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக கடந்த 28.03.2024-ம் தேதி முடிக்கப்பட்ட மனுதாரர்/வாதி தரப்பு 1வது சாட்சியத்தினை Re-Open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கில் 28.03.2024-ம் தேதி வாதி தரப்பு 1வது சாட்சியான மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் (வா.சா.ஆ.16 முதல் 19) குறியீடு செய்து கொள்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது.. அன்றையதினம் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் உயர் ரத்த அழுத்தம் காரணமாக மனுதாரரால்

இந்நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக இயலவில்லை. எனவே 28.03.2024-ம் தேதி மனுதாரர் தரப்பு (PW1) முடிக்கப்பட்டு கூடுதல் வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டு வருகிறது. மனுதாரரும் தொடர்ந்து உடல்நலம் சரியில்லாமல் இ ருந்து வருகிறார். மேற்படி காரணமும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல . அசல் வழக்கில் மனுதாரரருக்கு நல்ல வாதம் உள்ளது . எனவே மனுதாரர் தரப்பில் (PW1) கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதற்கு ஏதுவாக 28.03.2024-ம் தேதி முடிக்கப் பட்ட மனுதாரரது சாட்சியினை Re-Open செய்ய உத்தரவு செய்து நீதி வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்படி மனுவை ஏற்று உத்தரவிட வேண்டும்.

### 3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்

இந்த அசல் வழக்கை நீண்ட காலத்திற்கு தொடர வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது . இந்த அசல் வழக்கு 26.04.2018 முதல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஆனால் இந்த மனுதாரர் / வாதியின் வழக்கில், வழக்கின் விசாரணை நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக 24.06.2022 வரை 11 முறை ஒத்திவைக்கப்பட்டது. இறுதியாக அசல் வழக்கு 24.06.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. 27.03.2023 அன்று மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் பேரில் வழக்கு பின்னர் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மீண்டும் மனுதாரர் 20.04.2023 முதல் 08.03.2024 வரை சுமார் 19 விசாரணைகளை நடத்த முன்வரவில்லை. இறுதியாக மனுதாரர் 21.03.2024 அன்று தனது ஆதாரப் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்தார் . ஆனால் அவர் தனது ஆவணங்களை கொஞ்சம் கொஞ்சமாக தாக்கல் செய்தார் மற்றும் சில ஆவணங்களைத் தயாரிப்பதற்காக ஒத்திவைக்க வேண்டும் என்று கோரினார். இந்த நீதிமன்றம், மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை நீடிப்பதைக் கண்டறிந்து இறுதியாக 28.03.2024 அன்று அவரது PW1 விசாரணையை முடித்துவிட்டு, மேலும் வாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக 06.04.2024 அன்று வழக்கை ஒத்திவைத்தது.
06.04.2024 முதல் 12.08.2024 வரை 7 வாய்தாக்களுக்கு மனுதாரர் வேண்டுமென்றே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, சாட்சியங்களை மீண்டும் விசாரணை செய்ய கடைசியாக, 12.08.2024 அன்று வழக்கு தொடர்ந்தபோது தன் தரப்பில் சாட்சியங்கள் இல்லை என தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தாவா சொத்துக்களை பெறுவதற்காக வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் எவ்வித உண்மையும் இல்லை . ஒவ்வொரு விசாரணைக்கும் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் இந்த நீதிமன்றத்திற்கு வராமல் நீதிமன்ற கட்டிடத்தின் தரை தளத்தில் அமர்ந்து வழக்கு ஒத்திவைக்கப் பட்டவுடன் சென்றுவிட்டார். எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை . சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை . இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புக்கள் பார்வையிடப்பட்டன.

6. அசல் வழக்கில் 28.03.2024-ம் தேதி வாதி தரப்பு 1வது சாட்சியை விசாரணை செய்து கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்ததாகவும் அன்றையதினம் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் மற்றும் உயர் ரத்த அழுத்தம் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராக இயல வில்லை எனவும் எனவே அசல் வழக்கை மீண்டும் Re-Open செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

7. மனுதாரர் அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்தில் பல வாய்தாக் களுக்கு ஆஜராகாமல் இருந்துவிட்டு இடைமனுக்களை தாக்கல் செய்து வருவதாகவும் மனுவில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை எனவும் மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு வராமல் கீழ்தளத்தில் இருந்துவிட்டு சென்றுவிடுவதாகவும் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

8. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் வா .சா.1 ஐ முதல் விசாரணை செயய் 11 வாய்தாக்கள் கொடுக்கப்பட்டும் ஆஜராகாமல் 24.06.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும் மீண்டும் வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு 19 வாய்தாக்கள் கொடுக்கப்பட்டும் விசாரணையை நடத்த முன்வரவில்லை . 06.04.2024 முதல் 12.08.2024 வரை 7 வாய்தாக்களுக்கு மனுதாரர் வேண்டுமென்றே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை . வா.சா.1 ஐ விசாரணை செய்து கூடுதல்

ஆவணங்களை தாக்கல் செய்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றாலும் மனுதாரர் வழக்கினை விரைவாக நடத்தாமல் தாமதப்படுத்துகிறார் என்பது அறிய இயலுகிறது . மனுதாரர் தரப்பு வழக்கினை மெய்ப்பிப்பதற்கு மனுதாரரை மீண்டும் விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபணை மற்றும் வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டு இந்த மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. வா.சா.1 ஐ முதல் விசாரணை கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக நான்கு வாய்தாவிற்குள் முடித்துவிடவேண்டும் என்று நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்படுகிறது . தவறும் பட்சத்தில் வா.சா.1 முதல் விசாரணை சாட்சியம் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக அனுமதிக்கப்படுவார் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN Date: 2024.10.29 18:45:52 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN Date: 2024.10.29 18:45:43 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை.

Subordinate Court
Sivagangai
I.A.No.2/2024 in
O.S.No.319/2017
in
**Draft/Fair/Order**
29.10.2024.